நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை.**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருமங்கலம்.

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் சனிக்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.978/2022

**CNR No.TNMD14 - 001577 - 2022**

*****

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,

பெருங்குடி காவல் நிலையம்,

குற்ற எண்.244/2021 ...குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

மீனா (வயது 32/2022),

க/பெ.சேகர்,

ரைஸ்மில் பின்புறம், வலையங்குளம்,

திருப்பரங்குன்றம் தாலுகா,

மதுரை மாவட்டம். ...குற்றம் சாட்டப்பட்டவர்

| | | | |
|---|---|---|---|
| 1. | **ஆண்டு பட்டிகை வழக்கு எண்.978/2022** | | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | | பெருங்குடி காவல் நிலைய குற்ற எண்.244/2021 |
| | **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | |
| 3. | எதிரியின் பெயர் | : | மீனா |
| 4. | எதிரியின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | க/பெ.சேகர் |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | எதிரியின் முகவரி | : | ரைஸ்மில் பின்புறம், வலையங்குளம்,<br>திருப்பரங்குன்றம் தாலுகா,<br>மதுரை மாவட்டம். |
| 7. | எதிரியின் வயது | : | 32/2022 |

| தேதி விபரங்கள் | | | |
|---|---|---|---|
| 8. | சம்பவம் | : | 11.10.2021 |
| 9. | புகார் | : | 14.10.2021 |
| 10. | கைது தேதி | : | 26.01.2022 |
| 11. | பிணை விடுப்பு | : | Station Bail |
| 12. | Committal | : | -- |
| 13. | விசாரணை துவக்கம் | : | 09.07.2026 |
| 14. | விசாரணை முடிவு | : | 21.07.2026 |
| 15. | தண்டணை (அ) ஆணை | : | குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | : | -- |
| 17. | Period of Remand of the accused | : | |
| 18. | Date of filing of the final report | : | 14.07.2022 |
| 19. | Date of questioning U/s.240, 246 & 251 of Cr.pc | : | 20.03.2023 |
| 20. | Miscellaneous petition and their results | : | U/s.311 CrPc – Allowed<br>U/s.320 CrPc - Dismissed |
| 21. | Date of examination in chief and cross | : | (see table below) |
| 22. | Date of examination accused U/s.313 Crpc | : | 21.07.2026 |
| 23. | Details of abscondence of accused and his appearance/production | : | Nil |
| 24. | Grant of stay by Superior court and the results thereof | : | Nil |
| 25. | காலதாமதத்திற்கான காரணம்: இல்லை | | |

| PW's | Chief | Cross |
|---|---|---|
| 1. | 09.07.2026 | - |
| 2. | 09.07.2026 | - |
| 3. | 09.07.2026 | - |
| 4. | 16.07.2026 | 16.07.2026 |

இவ்வழக்கானது கடந்த 21.09.2022ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையின் போது, அரசின் சார்பாக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.K.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இது நாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு 21.07.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்.

## தீர்ப்புரை

கடந்த 11.10.2021ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் எதிரி வாதியின் வீட்டிற்கு சென்று வாதியை பார்த்து ஏன்டி தேவிடியா உன் வீட்டு தண்ணீரை என் வீட்டு பக்கமாக ஏன் விடுற என்று அசிங்கமாக பேசியும், வாதியின் தலைமுடியை பிடித்து அடித்து இடது கையில் கடித்து வைத்து வீக்ககாயத்தை ஏற்படுத்தியும் குற்றம் புரிந்துள்ளதாக எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324 IPCன் படி குற்றம் புரிந்துள்ளதாக பெருங்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

02. இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான போது எதிரிக்கு வழக்கு நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

03. இவ்வழக்கில் எதிரிக்கு நகல்கள் வழங்கப்பட்ட பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பிறகு குற்றம் பற்றி வினவிய போது எதிரி பொய் வழக்கு என்று மறுத்து கூறினார். இரு தரப்பும் கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில்

போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324 IPCன் கீழ் குற்றசாட்டுகள் வனைந்து படித்துக்காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்ட போது எதிரி மீண்டும் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்.

04. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 4 வரையுள்ள சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

05. கடந்த 11.10.2021ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் எதிரி வாதியின் வீட்டிற்கு சென்று வாதியை பார்த்து ஏன்டி தேவிடியா உன் வீட்டு தண்ணீரை என் வீட்டு பக்கமாக ஏன் விடுற என்று அசிங்கமாக பேசியும், வாதியின் தலைமுடியை பிடித்து அடித்து இடது கையில் கடித்து வைத்து வீக்ககாயத்தை ஏற்படுத்தியதாகவும் உள்ளது.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

06. இவ்வழக்கின் புகார்தாரர் சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் மற்றும் புகார் கொடுத்தது பற்றியும் அங்காளஈஸ்வரி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும் மற்றும் சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சம்பவம் பற்றி ஒய்யம்மாள் மற்றும் சின்னபொண்ணு ஆகியோர்கள் முறையே அ.சா.2 மற்றும் 3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கினை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட பெருங்குடி சார்பு ஆய்வாளர் திரு.அனுமந்தன் என்பவரின் கையெழுத்து நன்கு தெரியும் என்றும், அவர்

மாற்று பணியில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக பெருங்குடி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ஜெயராமன் என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>எதிரியை கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

07. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது அவற்றை எதிரி பொய் சாட்சியம் என்று கூறியதோடு தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**<u>வாதுரைகள்:–</u>**

08. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் இருவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பில் எதிரி மீதான வழக்கை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

09. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.K.கிருஷ்ணன் அவர்கள் வாதிடும் போது அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும் வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட வழக்கு என்றும் எதிரியும் அ.சா.1ம் தற்பொழுது சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்து உள்ளதாகவும், எனவே அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை

எந்தவித சந்தேகங்களுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

**ஆய்வுக்குரிய பிரச்சனை:–**

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 294(b), 324 IPCன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**சாட்சிகளின் மதிப்பீட்டல்:–**

11. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தின் பொழுது தன்னிடம் காட்டப்படும் புகார் மனு கொடுத்தது நான் தான் என்றும், புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தன்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தான் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன் என்றும் சாட்சியம் அளித்து அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

12. இவ்வழக்கின் சம்பவ சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தின் பொழுது தங்களிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள கையொப்பம் தங்களுடையது தான் என்றும், தாங்கள் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தோம் என்றும் சாட்சியம் அளித்து அவர்களை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அவர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

13. இவ்வழக்கில் எதிரியும் அ.சா.1ம் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி சமாதானமனு தாக்கல் செய்துள்ளார்கள்.

14. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 மற்றும் சம்பவ சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளை சாட்சியாக விசாரித்தாலும் வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக பெருங்குடி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ஜெயராமன் என்பவரை அ.சா.4 ஆக விசாரித்து, அவர் மூலமாக வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து அரசு தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசு தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

15. மேற்கண்டவாறு அரசு தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் 3 வரையுள்ள சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் அவர்கள் எந்த இடத்திலும் எதிரி அ.சா.1ஐ பொது இடத்தில் பொது மக்களுக்கு மத்தியில் வைத்து திட்டியதாகவோ, அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவோ, சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டது பற்றி அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரியை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்கக்கூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் இல்லாததால் எதிரி மீதான குற்றச்செயல்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது

என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

16. முடிவாக, அரசு தரப்பு வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்கி எதிரியை இ.த.ச. 294(b), 324 IPCன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. சொத்துக்கள் இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**<u>பின்னிணைப்பு:-</u>**

**<u>1. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் மாதிரி அட்டவணை:-</u>**

| அரசு தரப்பு சாட்சி எண். | அரசு தரப்பு சாட்சியின் பெயர். | அரசு தரப்பு சாட்சியின் பங்கு |
|---|---|---|
| 1. | திருமதி.அங்காளஈஸ்வரி | புகார்தாரர் |
| 2. | திருமதி.ஒய்யம்மாள் | சம்பவ சாட்சி |

| | | |
|---|---|---|
| 3. | திருமதி.சின்னபொண்ணு | சம்பவ சாட்சி |
| 4. | திரு.ஜெயராமன் | விசாரணை அதிகாரி |

**2. அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் மாதிரி அட்டவணை:–**

| ஆவண எண். | ஆவணத்தின் பெயர். | ஆவணத்தை நிரூபித்த/ சான்றளித்த சாட்சி |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2. | சமாதான மனு | அ.சா.1 |
| 3. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |

**3. அரசு தரப்பு சான்றுப் பொருள்**:– இல்லை

**4. எதிரி தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**குறிப்பு:–** 1) விசாரணையின் போது எதிரி பிணையிலிருந்தார்.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:–** மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

**/உண்மை நகல்/**

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR Date: 2026.08.01 15:04:38 +0530

நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.